


# ஆய்வுக் களஞ்சியம்


பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்ரி

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை


நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் ‘A’ தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.


பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : **செல்வி ம.காயத்ரி**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா . ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூபு | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 96 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஶ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# சிறுகதைகள்

**ஆ. காமாட்சியம்மாள்**
பகுதிநேர நிறைஞர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

தன் எண்ணங்கள் அல்லது கருத்துக்களைக் கற்பனை நிகழ்வுகளுடன் கலந்து வெளிப்படுத்தி படிப்பவர்களின் சிந்தனையில் ஒரு சேரக் கலந்தோடச் செய்வது ஒரு படைப்பாளனின் அடையாளமாகும். அதிலும் ஒரு சிறுகதை ஆசிரியர் தனக்குக் கிடைத்த சிறியதொரு காலத்தில் இரண்டு அல்லது மூன்று பக்கத்தில் தன் கருத்தை வலியுறுத்தும் போது கற்பனை நிகழ்வுகளுடன் சொற்றொடரும் கருத்தார்பும் கதை நடையும் நடைமுறையோடு பொருந்த கதையமைத்தால் மட்டுமே அச்சிறுகதை வெற்றி பெறும். வாசிப்பவர்கள் சலிப்படையாமல் ஆர்வமடையும் வகையில் கதையை நகர்த்திச் செல்வது சிறுகதை படைப்பாளனின் சாமர்த்தியமாகும். உணர்ச்சிகரமான சொற்கள் நிகழ்வுகளைக் கொண்டு தேவையான அளவே கதாபாத்திரங்களை அமைத்துக் கொண்டால் அக்கதை எதார்த்தமாகவும் உயிரோட்டமானதாகவும் அமையும்.

ஒரு சமுதாயக் கருத்து அல்லது சமுதாய நீதியை வலியுறுத்தும் போது நிஜத்தில் நடைபெற வாய்ப்பில்லாத நிகழ்வை நிகழ்வதாகக் கூறி கதையமைக்கும் போது அது ஒரு கற்பனை கதைதான் எனினும் அதன் நீதி வாசிப்போர் மனதில் பதிய வேண்டும் என்பதே நோக்கமாகும்.

வரலாற்றுச் சிறுகதைகள், சமூகச் சிறுகதை, பெண்கள் விழிப்புணர்வுச் சிறுகதை, அறிவியல் சிறுகதைகள், குழந்தைகளுக்கான சிறுகதைகள் என பல்வகை சிறுகதைகள் இருந்த போதும் குழந்தைகளுக்கான சிறுகதைகளில் மேற்சொன்ன (நிகழாத) கற்பனை சிறுகதைகள் அதிகம் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக வேற்றுகிரகத்திற்குச் செல்வது, விலங்குகள், பறவைகள் பேசுவது, செடி, கொடி, மரங்கள், இலைகள் நகர்வது, ஆகாயத்தில் இறக்கை முளைத்து பறப்பது, ஒருவரே ஆயிரம் பேரை அழித்துக் கொல்வது போன்றவை கற்பனைச் சிறுகதைகள் எனலாம்.

**“பொய்மையும் வாய்மை யிடத்து**

**புணர்தீர்த்த நன்மைபயக்கு மெனின்"**

சிறார்களுக்கான அத்தகைய ஒரு நல்ல சிறுகதைப் படைப்பை நான் சமீபத்தில் வாசித்தேன். குழந்தைகள் விரும்பி வாசிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அச்சிறுகதைத் தொகுப்பு கற்பனை சிறுகதையாயினும் நல்ல நீதிநெறிகளை மையப்படுத்தி அமைக்கப்பட்டிருந்தது.

**திருமதி. கங்கா ராமமூர்த்தி அவர்களின் ஆய்வு குறிப்பில் "சிறுவர் கதை விருந்து"** என்னும் அந்நூல் வர்மாப் பதிப்பகத்தார் வெளியிட்டிருந்தனர்.

இந்நூல் குழந்தைச் செல்வங்கள் விரும்பும் யானை, சிங்கம், முயல், நரி, ஓநாய், காகம், மான் போன்ற விலங்குகள் மற்றும் பறவைகள் இணைந்த நீதிக் கதைகளைக் கொண்ட தொகுப்பாக அமைந்திருந்தது. விலங்குகளும் பறவைகளும் தங்களுக்குள் பேசிக் கொள்வதாக கற்பனையாக அமைக்கப்பட்டிருந்தாலும் இச்சிறுகதை தொகுப்பில் நிகழ்வுகளும் கதை நகரும் விதமும் உயிரோட்டமானதாக அமைந்திருந்தது.

**"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" "ஒற்றுமையே பலம்" "விதியை மதியால் வெல்லலாம்" "ஏமாறாதே ஏமாற்றாதே"** போன்ற சமூக நீதியையும், விழிப்புணர்வு, உதவி மனப்பான்மை, புத்திசாலித்தனம், ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற நல்ல பண்புகளைச் சிறார் மனதில் வலியுறுத்தும் விதமாக ஆசிரியர் ஒவ்வொரு சிறுகதையையும் கருத்துடனும் நேர்த்தியுடனும் கோர்த்திருந்தார்.

**சிறுகதைச் சுருக்கம்**

**ஒற்றுமையே பலம்**

ஒரு காட்டில் காகம், மான், ஆமை ஆகியவை நண்பர்களாக இருந்தனர். ஒரு நாள் வேடர்களிடம் ஆமை மாட்டிக் கொண்டது. தன் நண்பரைக் காப்பாற்ற காகமும் மானும் எண்ணியது. மான் இறந்ததைப் போல் நடிக்க, காகம் மானின் கண்களைக் கொத்துவதைப் போல் பாவனை செய்தது. இதனைக் கண்ட வேடர்கள் மானைத் தூக்கிச் செல்லும் பொருட்டு ஆமையைக் கீழே விட்டனர். மான் இருக்கும் இடம் நோக்கிச் செல்ல, ஆமை தப்பித்து சென்று ஒளிந்து கொண்டது. மான் விருட்டென்று எழுந்து துள்ளியோடியது.

**கருத்து**

நல்ல நண்பர்களைத் தேடி வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடன் உண்மையான அன்புடன் பழக வேண்டும். ஆபத்துக் காலத்தில் ஒற்றுமையுடனும் சிந்தித்தும் செயல்பட வேண்டும் போன்ற கருத்துக்கள் இச்சிறுகதை மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே ஒரு சிறுகதை அமைக்கும்போது ஏதேனும் ஒரு அனுபவம் நிகழ சரித்திரம் அல்லது வேறு ஏதாகினும் அது வாசிப்போர் மனதில் பதிய வேண்டும். ஒரு தனி மனிதனுக்கோ அல்லது சமுதாயத்திற்கோ பயன்படும் வகையில் நல்ல கருத்துக்களை வலியுறுத்துவது ஒரு படைப்பாளனின் தலையாயப் பொறுப்பாகும்.

❖




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்